ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2016.08.15

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு

- **தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** யூலையில் 50.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 2016 யூனின் 55.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சமநிலையான செயலாற்றமொன்றினை எடுத்துக்காட்டியது. யூனுடன் ஒப்பிடுகையில் யூலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு புதிய கட்டளைகளும் உற்பத்திச் சுட்டெண்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணிலும் துணைச் சுட்டெண்களிலும் ஏற்பட்ட மாதத்திற்கு மாத வீழ்ச்சியினைத் தொடர்ந்து 2016 மேயுடன் ஒப்பிடுகையில் யூன் மாதத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. தொழில்நிலை மற்றும் கொள்வனவு இருப்புக்கள் சுட்டெண்கள் என்பன நீங்கலான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. உற்பத்தி மற்றும் கொள்வனவு இருப்புச் சுட்டெண்களின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் ஒட்டுமொத்த தரவுப் புள்ளிகள் விரிவாக்கமொன்றினைக் கொண்டிருந்த வேளையில், மற்றைய அனைத்து துணைச் சுட்டெண்களும் சமநிலையான 50.0 அடிமட்டத்திற்கு கீழ் தொடர்ந்தும் காணப்பட்டன. நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் முன்னேற்றமொன்றினை எடுத்துக்காட்டுகின்றன.

- **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2016 யூனில் பதிவுசெய்யப்பட்ட 56.3 இலிருந்து யூலையில் 57.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. கடந்த மாதத்தின் பெறுமதியினை விட கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு அண்மைய மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகள் மிதமான வேகத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டுகின்றன. வியாபார நடவடிக்கை நான்கு மாதங்களில் மிக உயர்ந்த வீத விரிவாக்கத்தினைப் பதிவுசெய்துள்ளது. தொழில்நிலைத் துணைச் சுட்டெண் யூனில் 51.5 கொண்ட தாழ்ந்த சுட்டெண் புள்ளிகளிலிருந்து மீட்சியடைந்துள்ளது. யூனுடன் ஒப்பிடுகையில் யூலையில் நடவடிக்கைகளுக்கான புதிய வியாபாரம் மற்றும் எதிர்பார்ப்புக்கள் இரண்டிற்குமான விரிவாக்கத்தில் மெதுவான வேகம் பதிவுசெய்யப்பட்டது. பணிகளின் நிலுவைகள் யூனுடன் ஒப்பிடுகையில் யூலையில் வீழ்ச்சியடைந்தன. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணினைத் தொகுக்கும் செயற்கிரமத்தில் பரிசீலனைக்கெடுக்கப்படாத விலை விதிப்புக்கள் 2016 மேயின் உச்சமட்டத்திலிருந்து தொடர்ந்து இரண்டாவது மாதமாக 2016 யூலையில் வீழ்ச்சியடைந்தன.

| ஆண்டு | மாதம் | கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் |
|---|---|---|---|
| 2015 | மே | 67.3 | 66.8 |
| | யூன் | 57.5 | 65.0 |
| | யூலை | 55.5 | 60.6 |
| | ஓகத் | 56.5 | 59.8 |
| | செத் | 53.2 | 61.7 |
| | ஒத் | 57.8 | 59.5 |
| | நவெ | 54.8 | 59.3 |
| | திசெ | 57.9 | 60.2 |
| 2016 | சன | 51.9 | 58.0 |
| | பெப் | 55.3 | 59.3 |
| | மாச் | 60.7 | 61.6 |
| | ஏப் | 41.6 | 54.7 |
| | மே | 47.9 | 58.1 |
| | யூன் | 55.1 | 56.3 |
| | யூலை | 50.6 | 57.8 |






**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கிறது.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமாக குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| வேலையில் நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.